

ஒரு புகைவண்டி பயணத்தில் மாவீரன் நீலவேந்தனுடன்

(முகநூலில் தம்பியே பதிவிட்ட புகைபடம்)

# அருந்ததியர் சமூகத்தின் விடிவெள்ளி மாவீரன் நீலவேந்தன் !!!

- **இரா. அதியமான்**

மாவீரன் நீலவேந்தனின் மரணச்செய்தி கேட்ட அதிர்ச்சியிலிருந்து இன்னமும் மீளமுடியாமல், துக்கம் என் குரல்வளையை அடைக்கின்ற நிலையிலேயே இந்த இரங்கல் செய்தியினை பதிக்கின்றேன். என்னத்தவம் செய்தார்களோ மதிப்பிற்குரிய திரு. பழனிச்சாமி அவர்களும் திருமதி. கலையரசி அவர்களும், இப்படியொரு மாவீரனை, சமூக விடிவெள்ளியை, எழுச்சிமிகு தலைவனை பெற்றெடுக்க?!?! நேற்று நடந்ததுபோல் உள்ளது, திரு. பழனிச்சாமி அவர்கள் தன் வீரமகனுடன் என்னை முதன் முதலில் சந்தித்தது உரையாடியது. “இவன் என் மகன் நீலவேந்தன் (எ) ஸ்ரீதர். அருந்ததியர் சமூக விடுதலைப் பணிக்காக என் மகனை உங்களிடம், ஆதித்தமிழர் பேரவையிடம் ஒப்படைக்கின்றேன். நீங்கள் இவனை அப்பணிக்காய் எப்படி வேண்டிமானாலும் பயன்படுத்தவும்”,

என்று உணர்ச்சி பொங்க நீலவேந்தனின் தந்தையார் என்னிடம் கூறியது இன்றளவும் என் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது.

அன்று தொடங்கி, நீலவேந்தனின் இறுதி மூச்சு வரை, அவர் தந்தையின் கோரிக்கையை இமியளவும் பிரியாமல், பேரவையுடன் இணைத்து மிகச்சிறப்பாக சமூகப் பணியாற்றியவர் தம்பி நீலவேந்தன். "தம்பி" என்று குறிப்பிட்டாலும் எப்போதும் அவரை என் மகன் என்று பாவித்தே அன்பு செய்தேன். இப்போது வீரமரணமெய்தி என்னை சொல்லொணாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டார். அவர் மரணத்தை ஏற்க முடியாமல், அவர் இடத்தை இட்டு நிரப்ப முடியாமல் என்னுடன் சேர்ந்து பேரவை தோழர்கள் அனைவரும் மீளமுடியாத சோகத்தில் வாடுகின்றனர்.

ஆதித்தமிழர் பேரவையில் இணைந்த நாள் முதல் நீலவேந்தன் களம் காணாத போராட்டங்களே இருக்க முடியாது. உண்மையில் அவர் ஒரு பொறியியல் பட்டதாரியாக இருந்தாலும், சமூகப் பணியாற்ற உதவும் சட்டத்தைப் பயின்று வழக்கறிஞராக பணியாற்றினார். பேரவைக்காக பல்வேறு வழக்குகளில் வாதாடியது துவங்கி, அருந்ததியர் மீது நடந்த வன்கொடுமை போராட்டங்களில் போராடியது, தீண்டாமை கொடுமைகளுக்காய் சீறி எழுந்தது, பேரவை முன்னெடுத்த அருந்ததியர் உள்ளிடஒதுக்கீட்டு போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்றது, மளமல்லும் தொழிலாளர்களின் உரிமைகளுக்கை போராடியது, முல்லை பெரியார் மற்றும் பேரவை முன்னெடுத்த கள் எதிர்ப்பு போராட்டங்களில் பங்கெடுத்தது, ஈழத் தமிழர்களுக்கான போராட்டங்களில் தீவிரமாக பங்கேற்று அதற்காக மூன்று மாதங்கள் சிறை சென்றது, கூடங்குளம் போரட்டத்தில் முனைப்பாக பங்கெடுத்தது, பேரவை நடத்திய பல்வேறு பயிற்சிப் பட்டறைகளிலும், கருத்தரங்கங்களிலும் சிறப்பாக பங்காற்றி ஆயிரக்கணக்கான துடிப்புமிக்க இளைஞர்களை வளர்த்தெடுத்தது, என்று சொல்லிமாளமுடியாத அளவிற்கு தன்னை அனைத்து வகையிலும் சமுதாயப் பணிக்கு அர்ப்பணித்தவர்.

ஆதித்தமிழர் பேரவைக்கு நீலச்சட்டை அடையாளம் கொடுத்தவரே தம்பி நீலவேந்தன் தான்!

தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர், கார்ல் மார்க்ஸ் ஆகியோரின் தத்துவங்களை, கருத்துக்களை கரைத்துக் குடித்ததோடு நில்லாமல் அவற்றை தன் சொந்த வாழ்க்கையிலும் உறுதியாகக் கடைபிடித்தவர் தம்பி நீலவேந்தன். பேரவை மேடைகளில் மட்டுமல்லாது, தமிழகத்தில் உள்ள பல்வேறு முற்போக்கு அமைப்புகள், தலித் கட்சிகள், தலித் அமைப்புகள் என்று அனைத்து மேடைகளிலும் தனது எழுச்சிமிகுந்த உரையால் அனைவரையும் பிரம்மிக்க வைத்தவர். இதனாலேயே இவருக்கு அனைத்து இயக்கங்களின் தலைவர்களுடனும், தலித் கட்சிகளின் தலைவர்களுடனும், அனைத்து தம்பிகளுடனும் நட்பு உண்டு. கலைஞர், அறிஞர் அண்ணா, வைகோ, திருமா போன்ற தமிழகத்தின் சிறந்த பேச்சாளர்களின் வரிசையில் நின்று பேரவைக்கு பெருமை சேர்த்தவர் நீலவேந்தன். பேரவையால் நீலவேந்தன் வளர்ந்ததும், நீலவேந்தனால் பேரவை சிறப்பெய்திய அழகையும் எங்கனம் விவரிப்பது?

தம்பி நீலவேந்தன் மீது பல முறை வழக்குகள் தொடுக்கப்பட்ட போதிலும் சரி, அவர் சிறையில் இருந்த காலங்களிலும் சரி, எள்ளளவும் அதற்காக வருந்தியதில்ல, அஞ்சியதும் இல்லை. இன்னும் சரியாக சொல்லவேண்டுமானால், “என்னை பிணையில் எடுக்காதீர்கள்” என்று பேரவைக்கு உறுதியாகக் கட்டளையிட்டவர். சிறையில் இருந்த போது அங்கு எப்போதும் நீலச்சட்டை அணிந்திருந்ததாலும், அவரின் தெளிவான பேச்சு மற்றும் கருத்தால் ஈர்கப்பட்டார்கள் சிறைக் காவலர்கள் என்பதே உண்மை.

சாதி மத ஒழிப்பு போராட்டங்களில் தன்னை முனைப்பாக ஈடுபடுத்தி எவ்வேளையும் அதைப்பற்றியே சிந்திப்பவர். சிறந்த பேச்சாளர் என்பதோடு மட்டும் நில்லாமல், சிறந்த எழுத்தாளர், சிறந்தபாடகர், கவிஞர்,

கதையாசிரியர், கணினியை சிறப்பாக பயன்படுத்த தெரிந்த பொறியாளர், சிறப்பான வாகன ஓட்டுனர் என்று பன்முகத்தன்மை கொண்டவர் தம்பி நீலவேந்தன். பேரவை வெளியிடும் ஆதித்தமிழன் அறிவாயுதம் மாத இதழில் துணையாசிரியராக பணிபுரிந்தார், பல முறை சிறப்பான தலையங்கங்களை எழுதியுள்ளார். தீக்கதிர், கீற்று வலைதளம் போன்றவைகளில் அவரின் சிறப்பான படைப்புகள் இடம்பெற்றுள்ளன. “துக்கம்” என்ற அருந்ததியரின் அவல நிலையை கூறும் குறும்படத்தின் கருத்துருவாக்கத்திற்கு உதவியுள்ளார்(யூ டியுப்). பேரவையில் இணைந்தது முதல் முடிவு வரை, பொதுச்செயலாளர், துணை பொதுச்செயலாளர், மாணவரணி செயலாளர், நிதிச்செயலாளர், அமைப்புச்செயலாளர் என்று பல்வேறு பொறுப்புகளில் சிறப்பாக பணியாற்றினார். சிறப்பான தலைமைப் பண்பிற்கு சொந்தக்காரராக இருந்தாலும் நான் எந்த நேரத்தில் கேட்டாலும் தயங்காமல் பத்திரிகை செய்திகளை தயாரித்து உரிய நேரத்தில் அனுப்பியவர். பேரவையின் பலவேற பணிகளில் எனக்கு உற்ற துணையாய் இருந்தவர் தம்பி நீலவேந்தன். மும்பை, டெல்லி, பூனே மற்றும் தமிழகத்தின் அனைத்து ஊர்களுக்கும் அவருடன் தொடர்வண்டியிலும், வாகனத்திலும் பயணம் மேற்கொண்டது என் நெஞ்சை விட்டு ஆகலாமல் நிற்கின்றன. எனக்குப்பின் பேரவையை கட்டியாளப்போவது நீலவேந்தன் மட்டுமே என்று எண்ணியிருந்த என் நெஞ்சில் இடியாய் அவர் மரணச்செய்தி இறங்கியது. இப்படியொரு தோழரின் இழப்பை எங்கனம் ஈடு செய்வது என்று தெரியாமல் கலங்குகின்றேன்.

2008 ஆம் ஆண்டு, கலைஞர் உள்ளிட ஒதுக்கீடு வழங்கியபோது, “மூன்று விழுக்காடு போதாது, அடிமூட்டையாக இருக்கும் என் சமுதாயத்திற்கு சரிபங்கான ஆறு விழுக்காடு வேண்டும்” என்று ஆற்றாமையில் சீறினார் நீலவேந்தன். அன்று முதல் உள்ளிட ஒதுக்கீடு பாதுகாப்பு போராட்டங்கள் மற்றும் ஆறு விழுக்காடு கேட்டு போராடிய போராட்டங்களில், “எங்களுக்கான பங்கை வழங்காவிட்டால் நாங்கள் நூறு இளைஞர்களை திரட்டி தீக்குளிப்போம்” என்று மேடைதோறும் முழங்கி வந்தார். ஆதித்தமிழர் பேரவை வெளியிடவிருக்கும் அருந்ததியர் உள்ளிட ஒதுக்கீடு புத்தகத்தைப் பற்றி தம்பி நீலவேந்தனிடம் ஆலோசனை செய்யும் பொழுதுகூட,

அட்டைப்படமாக கோவை சம்பத் தீக்கிரையான புகைப்படம்தான் போடா வேண்டும் என்று என்னிடத்தில் கூறியிருந்தார். எதற்காக அந்தப்படத்தை போடச்சொல்கிறார் என்று யோசித்து முடிப்பதற்குள் அவரின் மரணச்செய்தி என்னைவந்தடைந்தது. தொண்டர்கள் மட்டுமே தீக்குளிப்பார்கள் என்ற வழக்கை மாற்றி, செப்டம்பர் மாதம் 26 ஆம் தேதியன்று, அதிகாலையில் “தமிழக அரசே! அருந்ததியருக்கு ஆறு விழுக்காடு உள்ளிட ஒதுக்கீடு வழங்கிடு” என்று மரணசாசனம் எழுதிவைத்துவிட்டு, தன் உடலை தீயிட்டு ஈகம் செய்துகொண்டார். எந்தத் தியாகமும் செய்திராத சாதி, என்ற பொய்க்கூற்றை உடைத்து, தலைவனாய் இருந்தும், அருந்ததியர் சமூகத்திற்காய் தன் உயிரை ஈகம் செய்து, வரலாற்றினை புரட்டிப் போட்ட மாவீரன் நீலவேந்தனுக்கு எத்துணை முறை வீரவணக்கம் செலுத்தினாலும் தகும்.

தம்பி நீலவேந்தனின் வீரமரணத்தை ஏற்க மனமின்றி, அவரை இழந்த இயலாமையால் சிலர், “அவர் சாவில் மர்மம் இருக்கின்றது, சந்தேகம் இருக்கின்றது” என்றெல்லாம் வதந்தி பரப்புகின்றனர். தோழர்கள் இனியேனும் நீலவேந்தனின் வீரமரணத்தை கொச்சைபடுத்தாமல், அவர் விட்டுச்சென்ற கோரிக்கையை தீவிரமாக முன்னெடுத்துச் செல்வதுதான் அவரருக்கு நாம் செய்யும் குறைந்தபட்ச மரியாதையாக இருக்க முடியும். உறங்கிக்கிடந்த அருந்ததியர் சமுதாயத்தை, தன் உயிரை ஈகம் செய்து விழிக்கச் செய்தவருக்கு நாம் செய்ய வேண்டிய கடமை அவர் விட்டுச்சென்ற பணிகளை தொடர்வதுதான். வார்த்தைகளால் விவரிக்க முடியாத துயரத்தில் இருந்த நேரத்திலும், மிகத் தெளிவாக “அதியமான் முடிவு தான் என் முடிவு” என்று அழுத்தமாக அனைவரிடத்திலும் பதிவு செய்த நீலவேந்தனின் தந்தையார் திரு. பழனிச்சாமி அவர்களுக்கு என் வணக்கத்தை இங்கு பதிவு செய்கிறேன். பேரவையே முற்றிலுமாக சோகத்தில் மூழ்கியிருந்தாலும், எத்துனைமுறை, எத்துனைப்பேர் ஆறுதல் கூறினாலும், ஆற்றாமையில் நாங்கள் வாடினாலும், நீலவேந்தனை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு பேரவையின் சார்பில் என் ஆழ்ந்த இரங்கலை பதிவு செய்கிறேன்.